செ.வெ.எண்:14 நாள்:06.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 01.07.2021 முதல் 30.09.2021 வரையிலான காலாண்டிற்கு 30.06.2021 அன்றைய தேதியில், நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், பள்ளியிறுதி வகுப்பு தோல்வி / பத்தாம் வகுப்பு தேர்ச்சி / பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு ஆகிய கல்வித்தகுதிகளை பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிவுற்ற பொது பிரிவினரும், மேற்கண்ட கல்வித்தகுதிகளை பதிவு செய்து ஓராண்டு முடிவுற்ற மாற்றுத்திறனாளிகள் அனைவரும் தகுதியுடையவராவர்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர்கள்

1.ஆண்டு வருமானம் ரூ.72,000/- (பொதுவானவர்களுக்கு) இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு வருமான உச்சவரம்பு கிடையாது.

2.வயது வரம்பு தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு – 45 வயதுக்குள் இருத்தல்வேண்டும். இதர வகுப்பினர் 40 வயதுக்குள் இருத்தல்வேண்டும்.

3.உதவித்தொகை பெற விரும்புவோர் தினசரி பள்ளி / கல்லூரி சென்று பயிலும் மாணவராக இருத்தல் கூடாது.

4.உதவித்தொகை பெற விரும்புவோர் அரசு அல்லது தனியார் துறையிலோ பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்ட தகுதியுள்ள மனுதாரர்கள் https://tnvelaivaaippu.gov.in/ என்ற இணையதள மூலம் உதவித்தொகை விண்ணப்பத்தினை பதிவிறக்கும் செய்து விண்ணப்பிக்கலாம்.

ஏற்கனவே, உதவித்தொகை பெற்றுவரும் பயன்தாரர்கள் 2021-22-ஆம் ஆண்டிற்கான சுயஉறுதி மொழி ஆவணங்களை மார்ச்–2022-க்குள் அளிக்கும்படி காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வேலைவாய்ப்பு பயிற்சி துறை மூலமாக வேலையளிப்போர்களையும், வேலை நாடுநர்களை இணைக்கும் வகையில் தமிழக அரசால் வடிவமைக்கப்பட்டுள்ள "Tamilnadu Private Job Portal" www.tnprivatejobs.tn.gov.in என்கிற இணையத்தளத்தில் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற பதிவு செய்து பயன்பெற்று கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**